(முற்பகல் 9–50)

திரு தி. கா. நல்லப்பன், தலைவரவர்களே, 1 2 3, 4 5, 6 என்று இப்போது தரம் பிரிக்கப்பட்டிருக்கிறது. அது ஏற்கெனவே குடிநீர் இருக்கிற அந்த கால கட்டத்திலே பிரிக்கப்பட்டது. ஆனால் இன்றையதினம் பல்வேறு இடங்களிலே குடிநீர் இல்லாமல் இருக்கின்ற காரணத்தினால் இந்த தரத்தைக் கணக்கிடாமல் தண்ணீர் இல்லை என்று சொல்லுகின்ற பகுதிகளுக்கு உடனடியாக தண்ணீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே தரம் பிரிக்கப்பட்டது 1976–ல், அதற்குப் பின்னால் 'மெனி சேஞ்சல் ஹ்ராவ் பீன் மேய்ட்' மாண்புமிகு உறுப்பினர்கள் அவ்வப்போது கொடுத்த கருத்துக்களை வைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குத் தெரிவித்து, அவர்கள் பி.டி.ஓ–க்களுக்கு அனுப்பி, ஆய்வு செய்து தேவையான மாற்றங்கள் நிறைய செய்யப்பட்டிருக்கின்றன. சில இடங்களில் ஆய்வு செய்ததில், 6–வது பிரிவில் இருந்த இடங்கள் 3–வது பிரிவுக்கு கொண்டு வரப்பட்டிருக்கின்றன. எல்லா இடங்களிலும் அப்படி மாற்ற வேண்டுமென்ற உணர்வு இல்லாமல், உரிய ஆதாரங்களோடு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்தால், அதிகாரிகளைக் கொண்டு பரிசீலனை செய்து, அக்கறையோடு உரிய நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயாராக இருக்கிறது.

போளூர் ஊராட்சி ஒன்றியப் பகுதியிலுள்ள கிராமங்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டம்.

*வினா எண் 133—திரு இல. பலராமன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு' விடையளிப்பாரா—

போளூர் வட்டாரத்தில் எத்தனை கிராமங்களுக்கு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் குடிநீர் வழங்க 1980–1981ம் ஆண்டும், 1981-1982ம் ஆண்டும் திட்டமிடப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: வட ஆற்காடு மாவட்டம், போளூர் ஊராட்சி ஒன்றியத்தில் 1980–81ம் ஆண்டில் முதலாம் கட்ட தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 9 சிற்றூர்களுக்கு குடிநீர் வசதியளிக்கப்பட்டுள்ளது. 1981-82ம் ஆண்டில் வறட்சி நிவாரணப் பணித் திட்டங்களின் கீழ் இந்த ஒன்றியத்தைச் சேர்ந்த 23 சிற்றூர்களின் குடிநீர்த் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு உள்ளது. இப்போது நிலைமை சரியாக இருக்கிறது.